Holland Bloorview
Kids Rehabilitation Hospital
150 Kilgour Road
Toronto ON Canada M4G 1R8
**தொலைபேசி எண்** 416 425 6220
**தொலைபேசி** 800 363 2440
**தொலைநகல் எண்** 416 425 6591
www.hollandbloorview.ca

Toronto பல்கலைகழகத்துடன் முழுமையாக இணைக்கப்பட்ட ஒரு பயிற்றுவிக்கும் மருத்துவமனை

**இந்தக் கடிதத்தில் மருத்துவ தரவுகளை நாங்கள் எப்படி பகிர்கிறோம் என்ற முக்கிய புதுப்பிப்பு இருக்கிறது.**

நீங்கள் Holland Bloorview -இன் செயலில் உள்ள வாடிக்கையாளர் என்பதால் இந்தக் கடிதத்தைப் பெறுகிறீர்கள். உங்கள் நிலையில் மாற்றம் இருந்தால் அல்லது நீங்கள் இந்தக் கடிதத்தைத் தவறுதலாகப் பெற்றிருந்தால், உங்கள் பிள்ளையின் மருத்துவ பதிவுகளைப் புதுப்பிக்க Holland Bloorview's Health Information Management -ஐ (416) 425-6220 x 3422 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும்.

இந்தக் கடிதம், www.hollandbloorview.ca/datasharing -இல் அரபு, பெங்காலி, பாரம்பரிய சீன, எளிமைப்படுத்தப்பட்ட சீன, டாரி, ஃபார்ஸி, பிரெஞ்சு, ஸ்பானிஷ், தமிழ், உருது மற்றும் வியட்நாமிய மொழிகளில் கிடைக்கும்

ஜூன் 9, 2025

அன்பார்ந்த வாடிக்கையாளருக்கும் குடும்பத்தினருக்கும்,

கனடாவின் மிகப் பெரிய குழந்தை நல மறுவாழ்வு மருத்துவனையான Toronto பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்ட Holland Bloorview Kids Rehabilitation Hospital, குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் உங்களைப் போன்ற குடும்பங்களுக்கு மிகவும் அர்த்தமுள்ள மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஆதரிக்கும் வகையில் மருத்துவச் சிகிச்சையை மாற்றுகிறது.

வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்களின் தனித்துவமான உடல்நலம், மன மற்றும் வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யப் புதிய குழந்தை மருத்துவ கண்டுபிடிப்புகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகளைத் தெரிவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

**இந்த உறுதிப்பாட்டிற்கு மருத்துவ தரவின் அணுகல் மற்றும் கட்டுப்படுத்தல் மிகவும் அவசியம்**.

நீண்ட காலமாக, குழந்தை நல மருத்துவ தரவு, குறிப்பாகக் குழந்தை நல இயலாமை மருத்துவ தரவு புது கண்டுபிடிப்பு மற்றும் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை, அது குழந்தை நல அமைப்பில் புது கண்டுபிடிப்பில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

மின்னணு மருத்துவ பதிவேட்டிலிருந்து (EMR) **அடையாளம் மறைக்கப்பட்ட** தரவை (வாடிக்கையாளரின் பெயர் அல்லது முகவரி போன்ற தனிப்பட்ட தகவல்கள் இல்லாத தரவு) ஆராய்ச்சி கூட்டாளர்கள் மற்றும் தரவு கூட்டமைப்புகளுடன் பயன்படுத்திப் பகிர்வதன் மூலம், தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளில் வளர்ச்சியை நாம் விரைவுபடுத்தலாம். இயலாமை, வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் அரிதான மரபணு உடல்நலக்குறைவு உடைய குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் நிலைகளை நாம் கணிக்கலாம் மற்றும் மேம்படுத்தலாம்.

உதாரணமாக, Holland Bloorview -இல் இருக்கும் ஆராய்ச்சியாளர்கள் EMR -இலிருந்து பெறப்பட்ட அடையாளம் மறைக்கப்பட்ட தரவை நரம்பியல் வளர்ச்சிக் குறைபாடுகளுடன் இருக்கும் குழந்தைகளுக்கான மருந்துகளின் வெளிப்பாடுகளைக் கணித்து மேம்படுத்தப் பயன்படுத்துகிறார்கள். ஒரு குழந்தை எந்த மருந்திற்குப் பதிலளிக்கிறார் என்பதை நம்மால் கணிக்க முடிந்தால், மிகச் சில சோதனைகளில் விரைவாகச் சரியான மருந்தைக் கண்டுபிடிக்க முடியும் - அதாவது குழந்தையின் வாழ்க்கைத் தரத்தையும் ஒட்டுமொத்த சுகாதார விளைவுகளையும் மேம்படுத்தலாம்.

ஜூலை 15, 2025 முதல், உடல் இயலாமை மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் இருக்கும் குழந்தைகளின் மருத்துவ தரவை ஒன்றிணைக்க, உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச அளவில் இருக்கும் ஆராய்ச்சி கூட்டாளர்கள் மற்றும் தரவு கூட்டமைப்புகளுடன் Holland Bloorview இணைந்து செயல்படும்.

இந்தக் கூட்டாண்மை புது கண்டுபிடிப்புகளில் இருக்கும் இடைவெளியைக் குறைக்கும் மேலும் அது Holland Bloorview மற்றும் உலகெங்கும் குழந்தை நல உடல் இயலாமை மற்றும் வளர்ச்சி குறைபாடு சிகிச்சையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். நமது முதல் கூட்டாண்மை KidSights Data Consortium நிறுவனத்துடன் - இதைப்பற்றி மேலும் அறிய www.hollandbloorview.ca/kidsights -க்கு செல்லவும்.

**இந்தக் கூட்டாண்மை மற்றும் தரவு கூட்டமைப்புகள் என்பது எனக்கும் எனது குடும்பத்திற்கும் என்ன பொருள்படுகிறது?**

நீங்கள் Holland Bloorview -இன் செயலில் உள்ள ஒரு வாடிக்கையாளராக (கடந்த இரண்டு வருடத்தில் சேவைகளை / சிகிச்சைகளைப் பெறுபவர்) இருந்தால், உங்கள் மின்னணு மருத்துவ பதிவுகளில் இருக்கும் அடையாளம் மறைக்கப்பட்ட தரவை தரவு கூட்டமைப்புகளுடன் பகிர்வோம். அதாவது உங்கள் குழந்தையின் அடையாளம் மறைக்கப்பட்ட தரவை உலகளாவிய மருந்து தயாரிப்பாளர்கள் மற்றும் மருத்துவ சாதன தயாரிப்பு நிறுவனங்கள் போன்ற வணிகரீதியான புது தயாரிப்பு கண்டுபிடிப்பாளர்கள் அல்லது கல்விசார் ஆராய்ச்சியாளர்களால் (Holland Bloorview ஆராய்ச்சியாளர்கள் உட்பட) அணுகப்படலாம். ஏன்? அப்போதுதான் அவர்களால், சிக்கலான மருத்துவ நிலைமைகளுக்கான புதிய மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகள், மருந்துகள், மருத்துவ சாதனங்கள் அல்லது தயாரிப்புகள் உள்ளிட்ட தீர்வுகளைக் கண்டுபிடிப்பதைத் துரிதப்படுத்த முடியும்.

நீங்கள் இதற்கு ஒப்புதல் அளித்தால், இதற்கு மேல் வேறு ஒன்றும் செய்யத் தேவையில்லை.

**அடையாளம் மறைக்கப்பட்ட தரவு பகிரப்படுவதிலிருந்து நான் விலக முடியுமா?**

ஆம். **ஜூலை 1, 2025** ஆம் திகதிக்கு முன் www.hollandbloorview.ca/datasharing -இல் கிடைக்கும் விலகல் படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம், தரவு கூட்டமைப்புகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் உங்கள் தரவு பகிரப்படுவதிலிருந்து விலகலாம். அந்தத் திகதிக்குள் நீங்கள் விலகல் படிவத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அடையாளம் மறைக்கப்பட்ட தரவை பகிரும் உங்கள் ஒப்புதல் அமல்படுத்தப்படும். இருப்பினும், நீங்கள் மனம் மாறினால், ஜூலை 1,ஆம் திகதிக்குப் பின்னர் எப்போது வேண்டுமானாலும் விலகலாம். உங்கள் விலகல் படிவம் கிடைக்கப்பெற்று, ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு, அதைச் செயலாக்க இரண்டு வாரக் காலம் ஆகும் என்பதை நினைவில் கொள்ளவும்.

உங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் முடிவு மிகவும் தனிப்பட்டது என்பதையும், அது உங்கள் தனித்துவமான அனுபவங்கள், கலாச்சார விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளால் வடிவமைக்கப்படலாம் என்பதையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம். உங்கள் கருத்துகளை மதிக்கவும் கௌரவிக்கவும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தகவலைப் பகிர வேண்டாம் என்ற உங்கள் முடிவு நீங்கள் பெறும் சேவைகளைப் பாதிக்காது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**Holland Bloorview எனது தரவை ஆராய்ச்சி கூட்டாளர்கள் மற்றும் தரவு கூட்டமைப்புகளுடன் எவ்வாறு பகிர்ந்துகொள்ளும்?**

Holland Bloorview வாடிக்கையாளர் மக்கள்தொகையியல் புள்ளிவிவரங்கள், நோயறிதல், உயரம், எடை, வயது, சிகிச்சை, கால அளவு சிகிச்சை பெறும் முறை (உள்/வெளி நோயாளி) உட்பட்ட அடையாளம் மறைக்கப்பட்ட தரவை மட்டுமே பகிரும். அதாவது, அதில் வாடிக்கையாளரின் பெயர், முகவரி, உடல்நல அட்டை எண் போன்ற தனிப்பட்ட தரவுகள் இருக்காது.

உங்கள் தனியுரிமையைப் பாதுகாக்க மற்றும் தகவலை ரகசியமாக வைத்திருக்க Holland Bloorview உறுதியாக இருக்கிறது. தனிநபர் உடல்நல தகவல் பாதுகாப்பு சட்டத்திற்கு (PHIPA) இணங்க, அனைத்து உடல்நல சிகிச்சை தகவலும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். தனியுரிமை பற்றி ஏதேனும் வினாக்கள் இருந்தால், (416) 425-6220 ext 3467 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது privacy@hollandbloorview.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் தனியுரிமை அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும்.

எங்கள் தரவு கூட்டமைப்பு உறுப்பினர்நிலை பற்றி நீங்கள் மேலும் அறிய விரும்பினால், www.hollandbloorview.ca/datasharing -ஐப் பார்வையிடவும். வாடிக்கையாளரின் அடையாளம் மறைக்கப்பட்ட மருத்துவத் தரவைப் பகிர்வது மற்றும் எவ்வாறு விலகலாம் என்பது பற்றிய வீடியோவைக் காண இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

உலகம் முழுவதும் உள்ள உடல் இயலாமை மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் கொண்ட குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்கான புது கண்டுபிடிப்பு இடைவெளியைக் குறைக்கவும், புது கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்தவும் தரவு நுண்ணறிவுகள் மூலம் மருத்துவச் சிகிச்சை மற்றும் சேவைகளை மாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,



Julia Hanigsberg
தலைவர் மற்றும் CEO